12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்
அவர்கள் அருளியது

# சித்தர் இராமாயணம் - II

# யக்ஞுவல்லியர் வரலாறு



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானச்சாரியார், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரூர்.**


## இந்து இலக்கியக் கழக வெளியீடு

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 தை மாதம்.**

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. யக்ஞவல்லி வரலாறு - மூன்றும் பாகம் யக்ஞவல்லியின் இரண்டாவது திருமணம்.

2. சித்தர் இராமாயணம் = யக்ஞவல்லி இராமாயணம்; இராமனின் மெய்யான வரலாறு = உண்மையான இராமாயணம்.

3. சித்தர் இராமாயணம் - யக்ஞவல்லி தரும் இராமாயணக் குறிப்புக்கள்.

---

"…. …. அதாவது திரேதா யுகத்து 12,90,000 ஆண்டுகளேயும், துவாபர யுகத்து 8,64,000 ஆண்டுகளேயும் கடந்து கலியுகம் பிறந்து இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து இந்துமதத்திற்கு உரிய இந்தியாவிற்குள் நுழைந்த பிறமண்ணினரான பிருமணர்கள் (*Brahmins என இன்று இந்தியாவிற்குள் வாழுபவர்கள்*) தங்களுடைய இனத்தைச் சேர்ந்தவன்தான் இராமன் என்றும்; தங்களுடைய மொழியான சமசுக்கிருத மொழிதான் இராமன் காலத்தில் பேச்சு மொழியாகவும், எழுத்து மொழியாகவும் இருந்தது என்றும் <u>மிகப் பெரிய பொய்களேக் கூறியே</u> தங்களே இந்த மண்ணுக்குரியவர்களாக ஆக்கிக் கொண்டார்கள். …. …."

*[குருதேவர் எழுதிய கட்டுரையிலிருந்து.]*

# யக்ஞவல்லி வரலாறு - மூன்றும் பாகம்

## யக்ஞவல்லியின் இரண்டாவது திருமணம்.

யக்ஞவல்லி சூரிய குலத்து மன்னர்களின் பரம்பரையில் தோன்றியவராவார். இவருடைய காலத்தில்தான்

1.தசரதன், 2.சனகன், 3.கோகையன், 4.ஆதித்தன், 5.காகுத்தன், 6.மகதன், 7.சிவன், 8.பிறமண், 9.தேவநாதன், 10.இயமன், 11.தக்கன், 12.சிவி, 13.பகீரதன், 14.முசுகுந்தன், 15.கோமனு, 16.சாகரன், 17.திருமால், 18.பிறம்மாபதி (பிறகபதி), 19.அமுசுமான், 20.சந்திராதித்தன், 21.சுவாதித்தன், 22.பிறமாதித்தன், 23.பகவாதித்தன், 24.சிங்காதித்தன், 25.வேங்கையாதித்தன், 26.களிருதித்தன், 27.அண்டமனு, 28.பேரண்டமனு, 29.அண்டபேரண்டமனு, 30.பிண்டமனு, 31.வையமனு, 32.அருவமனு, 33.உருவமனு, 34.மருது, 35.விருது, 36.மிருது, 37.அச்சுவாகு, 38.இச்சுவாகு, 39.உச்சுவாகு, 40.மச்சுவாகு, 41.விச்சுவாகு, 42.பிச்சுவாகு, 43.அகுத்தன், 44.இகுத்தன், 45.உகுத்தன், 46.மகுத்தன், 47.விகுத்தன், 48.பிகுத்தன், 49.மாந்தாதா, 50.பந்தாதா. 51.இரவி, 52.இரகு, 53.கதிரவன், 54.பகலவன், 55.பகவான் (*பகவன் - பாட வேறுபாடு*), 56.சோமன், 57.சாமன், 58.வாமன், 59.தாமன், 60.ஏமன், 61.அந்தன், 62.தந்தன், 63.நந்தன், 64.விந்தன், 65.வேந்தன், 66.ஏந்தன், ... முதலிய மன்னவர்கள்தான் சூரியகுலத்தின் புகழ் பெற்ற மன்னவர்கள் என்று மிகத் தெளிவான, முறையான அரச பாரம்பரியம் (அரசர்களின் வரலாறு) எழுதப்பட்டது.

இதனைப் புரிந்து கொள்ள முடியாத பலர் யக்ஞவல்லி, யோகீசுவரர், பிறம்மயோகி என்ற சிறப்புக்களையெல்லாம் எய்திய சூரியனாரின்

சமகாலத்து மன்னவர்கள் என்று கருதி பிற்காலத்தில் பல வரலாற்றுக் குழப்பங்களேயும் உண்டாக்கி விட்டார்கள்.

ஆனுல், மேலே பட்டியலிடப்பட்ட அனைவரின் சூரிய குலத்தில்தான் தோன்றினுர் சூரியனுர் என்ற இயற்பெயரை உடைய யக்ஞவல்லி, பிறம்மயோகி, யோகீசுவரர் என்பவர். ஏனெனில், கபாடபுரத்துக் கருவூருரின் அரச பாரம்பரியமும், தாமிரபரணியாற்றங்கரைக் கருவூருரின் அரச பாரம்பரியமும் வழங்குகின்ற அரச குடும்ப வரலாறுகள் ஏறத்தாழ இந்த யக்ஞவல்லியின் சூரிய குல மன்னர்களின் பட்டியலுக்கு ஒத்தே வருகின்றன.

**சிறப்புக் குறிப்பு**:- யக்ஞவல்லி நாடாளும் அரசர்களைப் போல், அதாவது பொருளுலக வேந்தர்களைப் போல தானும் பல மனைவியர்களை மணப்பது தவறல்ல என்று வாதிடும் போது; தமது முன்னோர்களில் யார் யார் புகழ் பெற்ற அரசர்களாக இருந்தார்கள் என்று பட்டியலிட்டுக் காட்டுவதன் மூலம் தன்னை அரச குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்லது அரசகுலத்தில் தோன்றியவன் அல்லது அரச பாரம்பரியப் பண்புக்குரியவன் என்று மறைமுகமாக, நாகரீகமாக வலியுறுத்திக் கூறுகிறுர். இதனுல், அவர் அரசர்களைப் போல் தானும் பல மனைவிகளை மணந்து கொள்ளும் உரிமையுண்டு என்று தெளிவாக விளக்கினுர். இப்படியாக யக்ஞவல்லியின் இரண்டாவது திருமணத்தினுல் ஓர் அரிய அரச பாரம்பரியப் பட்டியல் கிடைக்கிறது.

இதேபோல், யக்ஞவல்லி தன்னுடைய அருளுலகப் பெருமையையும், உரிமையையும் இரண்டாவது திருமணத்தின் போது உலகுக்கு விளக்கிய போது; தன்னுடைய முன்னோர்களில் சமகாலத்தவர் உட்பட யார் யார் புகழ் மிக்க அருளாளர்களாக இருந்தார்கள் என்று ஓர் அரிய அருளுலகத்தாரின் பட்டியல் தயாரித்துக்

காட்டுகிருர். இதன் மூலம் இவரும் ஒரு குரு பாரம்பரியத்தை (சமய வரலாற்றை) எழுதியவராயிட்டார்.

இதே போல் இவர் தனக்கு முந்திய இலக்கியங்களையும், தம் காலத்து இலக்கியங்களையும் தன்னுடைய ஏட்டறிவுக்கு அளவுகோலாக ஒரு மாபெரும் பட்டியலிட்டுக் காட்டிஞர். இப் பட்டியல் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் இலக்கிய பாரம்பரியங்களை விட முதன்மையும், பயனும், சிறப்பும் உடைய இலக்கிய பாரம்பரியமாக (இலக்கிய வரலாறு = சமுதாய வரலாறு) சிறப்புப் பெற்று விளங்குகிறது.

இப்படியாக யக்ஞவல்லியின் இரண்டாவது திருமணம் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் ஆக்கப் பணிகளைப் போல 'குரு பாரம்பரியம்', 'அரச பாரம்பரியம்', 'இலக்கிய பாரம்பரியம்' என்று மூன்று பெரும் பாரம்பரியங்களை உருவாக்கிக் கொடுத்தது. இதஞல்தான், யக்ஞவல்லியின் இரண்டாவது திருமணம் மிகச் சிறந்த வரலாற்றுப் புகழை உடையதாக அனைத்து வகையான சித்தர்களின் நூல்களிலும், அருளாளர்களின் நூல்களிலும் பாராட்டப் படுகின்றது.

பிற்காலத்தில் சூரிய குலத் தசரதன் மகன் இராமன் சுயம்வரப் போட்டியில் வென்று சனகனின் மகள் சீதையை மணந்த திருமணத்திற்கு அரச குடும்பத்தாரால் அளவுக்கு அதிகமான விளம்பரம் கொடுக்கப் பட்டதால்தான் குரு பாரம்பரிய அருளாளரான யக்ஞவல்லியின் மாபெரும் அருட்போர் வெற்றியால் நிகழ்ந்த இரண்டாவது திருமணத்தின் புகழும் செல்வாக்கும் மறக்கடிக்கப் பட்டது. இல்லாவிட்டால், திரேதா யுகத்து நாயகஞக சூரிய குலத்து அரசன் தசரதன் மகன் இராமன் விளங்குவதை விட; சூரிய குலத்து குரு பிறம்மராக்கதர் மகன் சூரியஞர் எனும்

யக்ஞவல்லிதான் திரேதா யுகத்தின் தலைவராக, நாயகராக விளங்கி இருப்பார்.

தசரதன் மகன் இராமன் ஒரே ஒரு இராவணப் போரைத்தான் செய்தான். அதுவும் துரோகிகளை வைத்துக் கொண்டு முறைகேடான சூழ்ச்சிகள் செய்து வென்றான். ஆனால், யக்ஞவல்லியோ எண்ணற்ற இராவணப் போரை விட பெரிய போர்களை நியாயமான முறையில் நேருக்கு நேர் நின்று அருட் போர்களாக, அறிவுப் போர்களாக நிகழ்த்தி வெற்றி வாகை சூடினார். எனவே, திரேதா யுகத்தின் பெருமைக்குரியது யக்ஞவல்லியின் கதை, காதை, கவிதை (காவியம்), கீதை என்பவைதானே தவிர இராம கதையோ, காதையோ, கவிதையோ, கீதையோ அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல!

இப்படி யக்ஞவல்லி அருட் போர்களிலும், அறிவுப் போர்களிலும் வாகை சூடி மாபெரும் வெற்றி வீரராக உயர்ந்ததற்குக் காரணமே அவரது இரண்டாவது திருமணம்தான். அதாவது, அவர் தன்னுடைய காலத்திலிருந்த பெண் சித்தர்களில் புகழ் வாய்ந்தவளாக இருந்த கார்க்கியின் மருமகள் மெய்த்தேவியின் மீது அவர் கொண்டிட்ட தீராக் காதல்தான். ஆனால், அவர் தன் காதலை உள்ளத்துள்ளேயே வைத்திருந்தார். அக் காதல் தெய்வீகக் காதல் என்பதனால் அது தானாக மெய்த்தேவிக்குள் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்தது. அதன்பிறகு, உலகறிய இத் தெய்வீகக் காதல் தெய்வீகத் திருமணமாயிற்று.

இதனை அறியாத பலரும் எதிர்பாராமல் யக்ஞவல்லியின் அருட் போர் வெற்றிகளையும், அறிவுப் போர் வெற்றிகளையும் கண்டு கார்க்கியின் மருமகள் மெய்த்தேவி ஆசைப்பட்டுக் கடுமையான எதிர்ப்புக்களுக்கு இடையே யக்ஞவல்லியைத் திருமணம் செய்து கொண்டாள் என்று உலகத்தார் கருதினார்கள். இதற்குச் சிறந்த மறுப்பாக யக்ஞவல்லியும், மெய்த்தேவியும் ஆண்டில் எட்டு மாதகாலம்

(முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்) அருட்பணி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் செயல்பட்டார். அப்படிச் செயல்பட்ட காலத்தில்தான் அவர்கள் காதல் பறவைகளாக முறையான இல்லறத்தை இனிமையாக நடத்தினார்கள். <u>**மெய்த்தேவி இந்தச் சுற்றுப் பயணங்களில்தான் எட்டு பெண் மகவுகளையும், ஒரு ஆண் மகவையும் ஈன்றெடுத்தார்**</u>. மெய்த்தேவியுடனான இவருடைய இல்லற வாழ்க்கை மூத்தவள் கார்த்தியாயினியின் இல்லற வாழ்க்கையோடு மோதவே இல்லை. இதுதான் தெய்வீகக் காதலின் சிறப்பு.

அதாவது இவள் திருமணமான புதிதில் கூட சமத்துவபுரத்தில் கார், கூதிர் எனும் இரண்டு பருவகாலத்திற்குரிய நான்கு மாதங்களிலும் தன் கணவர் யக்ஞவல்லி மூத்தவளான கார்த்தியாயினியுடன் களிப்பு மிக்க இனிய இன்பம் நிறை இல்லறம் நடத்த அனுமதித்து விட்டு, தான் மங்கல நாணைத் (தாலி) தவிர வேறு அணிகலன் ஏதும் அணியாமலும், பூசைக்குரிய மலர்களை மட்டுமே தவக்கோல உருத்திராட்ச மாலையோடும் அணிந்து சிவந்த மரவுரி தரித்து பலா மரத்தடியில் ஆழ்ந்த தவத்தில் கழித்திட்டாள். மற்ற எட்டு மாதங்களும் உச்சி முதல் உள்ளங்கால் வரை பொன்னாலான நவரத்தின அணிகலன்களை பூட்டி, வகைவகையான வண்ணப் பட்டு உடுத்தி, யக்ஞவல்லியோடு கை கோர்த்து ஆடிப்பாடி, அறுசுவை உணவு உண்டு, நிலவு கால வானத்து வானம்பாடிகள் போல மகிழ்வான இல்லற வாழ்வு நடத்தினாள்.

யக்ஞவல்லி இரண்டாவது மனைவியோடும், முதல் மனைவியோடும் வாழ்ந்த காலம் எட்டு மாதம் என்றும், நான்கு மாதம் என்றும் வேறுபட்ட அளவை உடையதாக இருந்தது என்று உலகத்தார் குறை கூறினாலும்; இரண்டாவது மனைவியோடு சுற்றுப்பயணம் செய்த காலம் எட்டு மாதம் என்றாலும்; இக்காலத்தில்தான் இரவு பகலாக மாணாக்கர்களுக்குப் பயிற்சியும், உலகத்தார்க்கு அறிவுரையும்,

அருளுரையும், அருளார்ந்த அறிவுரையும், அறிவார்ந்த அருளுரையும் வழங்கியும்; ஆங்காங்கே உள்ள 48 வகையான வழிபாட்டு நிலையங்களிலும் பூசையும், புத்துயிர்ப்புப் பணியும் நிகழ்த்திட்டார். எனவே, அவர் மெய்த்தேவியுடன் சுற்றுப்பயணத்தில் இல்லறம் நடத்தி இன்பம் துய்த்த கால அளவு மிகமிக குறைந்த கால அளவேயாகும். இதனால்தான் இளைய மனைவியைச் சுற்றுப் பயணத்திலும், மூத்த மனைவியை சமத்துவபுர குருகுலத்திலும் வைத்து இல்லறம் நடத்தினார்.

காலப் போக்கில் கார்த்தியாயினிக்கு எட்டு ஆண் குழந்தைகளும், ஒரு பெண் குழந்தையும் பிறந்தது போல்; மெய்த்தேவிக்கு எட்டு பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையும் பிறந்தன. எனவே, மெய்த்தேவிக்காக ‘யக்ஞவல்லி புரம்’ என்ற ஓர் அருட்கோட்டையை வளமான கங்கைக்கரைக் காடுகளின் ஊடே கட்டி அதனையே தமது அருட்பணி விரிவாக்கத் திட்டப் பயணத் தலைமைச் செயலகமாக ஆக்கினார். இதேபோல், கார்த்தியாயினியை கங்கைக்கு நடுவில் இருந்த சமத்துவபுரக் கோட்டையில் தங்கச் செய்து; அதனை, இந்து மறுமலர்ச்சி இயக்கத் தலைமைச் செயலகமாக்கினார். இரண்டு இடங்களிலும் குருகுலம், தவப் பள்ளி, பத்திப் பாட்டை, சத்திச் சாலை, சித்திச் சோலை, அருட் கோட்டம், ஞான மன்றம், முத்தி மன்றம், புத்துயிர்ப்புக் கலைக்கூடம், நான்வேத பாடசாலை, அருட்கலை பயிற்சி நிலையம், ஆயகலைப் பயிற்சிக் கூடம், ... என்று பதினெண்சித்தர்கள் இளமுறியாக் கண்டத்தில் தங்களின் தாய்மொழியான அமுதத் தமிழில் மனிசர்களை மனிதர்களாக்க வழங்கிய இந்துமதத்தின் அனைத்து வகையான எட்டுலகத் தத்துவங்களையும், நடைமுறைச் செயல்நிலை அமைப்புக்களையும் புத்துயிர்ப்புப் பெறச் செய்தார்.

அதாவது, இளைஞர், முதியவர்; ஆண், பெண்; ஏழை, பணக்காரர்; பாரம்பரியம் உடையோர், பாரம்பரியம் அற்றோர்; ... என்ற

வேறுபாடுகளே இல்லாமல் அனைவரும் ஆசைப்படுகின்ற அனைத்தையும் ஆர்வத்துக்கும், அக்கரைக்கும், அடுத்து முயலும் முயற்சிக்கும், தொடர்ந்து செய்யும் பயிற்சிக்கும் ஏற்பக் கற்றுக் கொள்ளலாம் என்ற சமமான வசதி வாய்ப்புக்களை மண்ணுலகத்தார் அனைவருக்கும் வழங்கினர். இதனால், சேவலோன் கலைகள், போர்க் கலைகள், தற்காப்புக் கலைகள், ஓகாசனக் கலைகள், யோகாசனக் கலைகள், அத்திறச் சூத்திறச் சாத்திற தோத்திற நேத்திற மர்ம ஓச்சுக் கலைகள், வர்மக் கலைகள், ஐந்திறங்கள், அங்கவியல்கள், மனையியல்கள், கனவியல்கள், மணவியல்கள், போகவியல்கள், மோகவியல்கள், யோகவியல்கள், ஓகவியல்கள், தாகவியல்கள் ..................

*[நகல் முழுமையாகக் கிடைக்கவில்லை.]*

***//உண்மை நகல்//***

***//இதன் மூலநகல்: வேம்படிதாளம் சித்தரடியான் ஒருவரின் கையெழுத்தில் இருந்த கையெழுத்துப் பிறதி நகலாகக் கிடைத்தது.//***

“ ... ஆரிய இதிகாசங்களான ராமாயணமும், பாரதமும் மற்ற வேதங்கள், உபநிசத்துக்கள், ஸ்மிருதிகள், மனுசூத்திரங்கள் முதலிய அனைத்திற்கும் பிறப்பிடமானவை. .... இராமனும், கண்ணனும் கரிய உடல் நிறத்தை உடையவர்களாவார்கள். இன்று வரை ஆரியர்கள் வெள்ளை நிறம் உடையவர்களாகவே இருந்து வருகிறார்கள். .... வெள்ளை நிறமுடைய ஆரியர்கள் கரிய நிறக் கண்ணனையும், இராமனையும் கடவுள்களாக ஏற்றது ஏன்? அப்படி ஏற்றுக் கொள்ளா விட்டால் அவர்களால் இந்தியத் துணைக்கண்டத்தில் வாழவே முடியாது என்ற மிகப் பெரிய நன்மையும் பயனும்தான் காரணம். எனவே ஆரியர்களின் எல்லா விதமான சரித்திரங்களும், இலக்கியங்களும், இதிகாசங்களும், நீதிகளும், வேதங்களும், புராணங்களும், கடவுள்களும், நம்பிக்கைகளும், பூசைமுறைகளும், தமிழ்க் கடவுள்களான இராமனையும், கண்ணனையுமே அடிப்படையாகக் கொண்டு பிறந்தவைகள் என்பது தெளிவாகின்றது...”

***- குருதேவர் எழுதியுள்ள குறிப்புக்களிலிருந்து.***

# <u>சித்தர் இராமாயணம்</u>

# <u>யக்ஞவல்லி இராமாயணம்</u>

## <u>இராமனின் மெய்யான வரலாறு</u>

## <u>உண்மையான இராமாயணம்</u>

1. விசுவாமித்திரர் புராணம்,
2. வசிட்டர் புராணம்,
3. பரசுராம புராணம்,
4. சமதக்கினி புராணம்,
5. கலைக்கோட்டு முனிவர் புராணம்,
6. காசிப முனிவர் புராணம்,
7. விபாண்டக முனிவர் புராணம்,
8. சரபங்க முனிவர் புராணம் (*சரபுங்கவன முனிவர் - பாட வேறுபாடு*),
9. அத்திரி முனிவர் புராணம்,
10. கோதம முனிவர் புராணம் (கௌதம முனிவர்),
11. சுதீட்சண முனிவர் புராணம்,
12. அகத்தியர் புராணம்,
13. பரத்துவாச புராணம்,
14. யக்ஞவல்லி புராணம்,
15. வால்மீகி புராணம்,
16. சுயக்ஞர் புராணம்,
17. வாமதேவர் புராணம்,

18. சாபாலி முனிவர் புராணம் (*காபாலி முனிவர் புராணம் என்ற பாட வேறுபாடு உண்டு*).

**<u>சித்தர் இராமாயணம்</u>**

யக்ஞுவல்லி இராமாயணம்,
மெய்யான இராமாயணம்,
இலவகுச காதை,
இலவகுச முடிசூட்டு விழா,
இலவகுச புராணம்,

இப்படி பல பெயர்களால் குறிக்கப் படும் இராமனின் வரலாறு திரேதா யுகத்தில் தோன்றிய அரசர்கள், அருளாளர்கள், பெருவீரர்கள், கொடையாளிகள், ஆசிரியர்கள், தவசிகள், ... முதலியவர்களுடைய வரலாறுகள் புராணங்களாக, கதைகளாக, காதைகளாக, கவிதைகளாக, கீதைகளாக, ... பல்வேறு வகையான இலக்கியங்களாகப் பிறப்பெடுத்தன. இவை சாதாரண மக்களின் அன்றாட வாழ்வில் பயன்படக் கூடிய தாலாட்டு, கும்மி, அம்மானை, கழங்கு, ஊசல், வள்ளை, கழனிப் பாட்டு, தொழிலாளர் பாட்டு, காவடிச் சிந்து, ... முதலிய உயிரிலக்கியங்களாக வடிவெடுத்தன. இவற்றில் பெரும்பாலானவை எழுதாக் கிளவிகளாக அதாவது செவிவழிச் செய்திகளாகவே படிப்பறிவில்லாத பாமர மக்களிடையிலும் நிலைத்த வாழ்வைப் பெற்றிருக்கின்றன.

பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் மேற்குறித்த எழுதாக் கிளவி இலக்கியங்களை இலக்கிய பாரம்பரியத்திலும், குரு பாரம்பரியத்திலும் அப்படியே இலக்கிய வடிவம் பெறச் செய்தார். அதாவது, நான்காவது யுகமான கலியுகத்தில் சித்தர்நெறி எனும் இந்துமதத்திற்கு ஏற்பட்டுவிட்ட சிதைவுகளையும், சீரழிவுகளையும், இழப்புக்களையும், திரிபுகளையும், குறைகளையும், மறைவுகளையும் ஈடுகட்டுவதற்காகவே இலக்கிய பாரம்பரியத்திலும்,

குரு பாரம்பரியத்திலும் எழுதாக் கிளவிகளாக நாட்டு வழக்கிலிருந்த பெரும்பாலான இலக்கியங்களை ஏட்டில் எழுதி நிலைத்த வடிவம் பெறச் செய்தார். இதன் மூலம், **மெய்யான இந்துமத**த்தைப் பாழ்படுத்திச் சிதைத்துச் சீரழித்துக் குறைத்துத் திரித்து மறைத்துப் புதிய *பொய்யான ஹிந்துமதத்தை* உருவாக்கிய பிறமண்ணினரான பிருமணர்களை எதிர்த்து ஆயிரக் கணக்கான ஆண்டுகள் போராடத் திட்டம் தீட்டினர்.

அதாவது, எழுதாக் கிளவிகளாக இருந்த இலக்கியங்களை போர் ஆயுதங்களாகவும், போர்ப் படைகளாகவும் பயன்படுத்தித்தான் *பொய்யான ஹிந்துமதத்தை* அழித்து **மெய்யான இந்துமத**த்தைச் செழிக்க வைக்க முடியும். இதற்காக அவர் வகுத்த வியூகங்களே அரச பாரம்பரியத்தில் விளக்கப் பட்டிருக்கின்றன. இப்படி இலக்கிய பாரம்பரியம், குரு பாரம்பரியம், அரச பாரம்பரியம் என்று மூன்று பெரும் இலக்கியங்களை உருவாக்கி பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியரோடு தமிழர்கள் தத்துவப் போராட்டமும், கருத்துப் போரும் தொடர்ந்து நிகழ்த்துவதற்கு ஏற்பாடு செய்தார் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி.

ஆனால், இவருடைய கனவும், கருத்தும், கொள்கையும், குறிக்கோளும், செயல் நோக்கும், திட்டப் போக்கும் இரண்டாயிரம் ஆண்டுகள் ஆகியும் வெற்றி பெற முடியாத நிலையில்தான் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன. இவர் **மெய்யான இந்துமத**த்தின் ஆட்சி மீட்சிக்காக தோற்றுவித்த இந்து மறுமலர்ச்சி இயக்கம் வளவளர்ச்சியே பெற முடியாமல் போய்விட்டது. இவரைப் பின்பற்றி 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை வளவளர்ச்சி பெறச் செய்ததால்தான் பிற்காலச் சோழப் பேரரசு என்ற ஓர் அருட்பேரரசு தோன்றி 500 ஆண்டுக் கால வாழ்வைப் பெற்றிட்டது (கி.பி.785 முதல் கி.பி.1279 வரை). இருந்தாலும் <u>பிறமண்ணினரான பிருமணர்கள் **மெய்யான இந்துமத**த்தைச்</u>

சிதைத்துத் தங்களின் வேதமதத்தின் அடிப்படையில் தாங்கள் உருவாக்கிய *பொய்யான ஹிந்துமதத்தின்* மூலமும், அதனுடைய ஆட்சிமொழியான சமசுக்கிருதத்தின் மூலமும் அருட்பேரரசை வீழ்த்திஞர்கள். தமிழர்களேத் தாழ்த்திஞர்கள். தமிழர்களே அடிமைச் சேற்றில் ஆழ்த்திஞர்கள். அறியாமைக் கடலில் மூழ்கச் செய்தார்கள். சாதிப் பிரிவினேத் தீயில் எரிந்து கருகிச் சாம்பலாகச் செய்தார்கள்.

2) கருவூரர் வழிவந்த மோகனூர் உருத்திரம் பிள்ளே, காகபுசுண்டர் வழிவந்த முடிகண்ட சோழபுரம் மருத பிள்ளே, வெள்ளேயப்ப பிள்ளே வகையருக்கள், தஞ்சை மருத்துவர் கொண்டையா பிள்ளே, திருச்சி மருத்துவர் திரிசிரம் பிள்ளே, திருநெல்வேலி சிவதாணுப் பிள்ளே, இராமநாதபுரம் குமரப்ப பிள்ளே, ... முதலிய பலரும் அமராவதியாற்றங்கரைக் கருவூருருக்கும், காவிரியாற்றங்கரைக் கருவூருருக்கும் பரம்பரையாக ஆண்டு தோறும் கொண்டாடப் படும் விழாக்களேக் கொண்டாடும் போதுதான் **மெய்யான இந்துமத**த்தின் வரலாறு பற்றிய நூல்களேயும், தத்துவ நூல்களேயும், சித்தாந்த நூல்களேயும், புராண இதிகாசங்கள் போன்ற இலக்கியங்களேயும் ஓலேகளில் படியெடுத்துப் பாதுகாக்கவும், பரப்பவும் கூட்டு முயற்சிகளேச் செய்தார்கள். அவற்றின் விளேவாக இந்தியா முழுவதும் துறவிகளிடையிலும், தவசிகளிடையிலும், பத்தியாளர்களிடையிலும், மெய்யான இந்துமதப் பற்ருளர்களிடையிலும் இந்து மறுமலர்ச்சிச் சிந்தனேகள் வளவளர்ச்சி பெற்றன.

இவற்றின் விளேவாகக் கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளேயவர்கள் பெருமுயற்சி செய்து நாடெங்கும் இருந்த அனேத்துச் சாதியினர்களிலிருந்தும் சிலரைத் தேர்ந்தெடுத்து அருளுலகப் பயிற்சிகளே வழங்கிஞர். எண்ணற்ற கோயில்களுக்கு (48 வகை வழிபாட்டு நிலேயங்கள், 48 வகைக் கருவறைகள், 48 வகை வெட்டவெளிக் கருவறைகள்) ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகச் சக்கரங்களேயும், ஐந்தீ வேட்டல்

எந்திறங்களையும், முத்தீ ஓம்பல் தகடுகளையும் வழங்கி அருளூற்றுக்களைப் பழுது பார்த்தார்.

எங்கும் அருள்நீர் பெருகி அருட்பயிர் தழைக்கச் செய்தார். அனைத்து வகையான கோபுரங்களையும் உயிரோட்டமாகப் பழுதுபார்த்தார். மீண்டும் கட்டினார். கோபுரக் கலசங்களில் நவதானியச் சத்தி நிலையையும், குருதிச் சத்தி நிலையையும், நவநீர்ச் சத்தி நிலையையும் (பால், மோர், இளநீர், மஞ்சள்நீர், கலவை நீர், ... முதலியவை) செழிப்படையச் செய்தார். புதிதாக மண்பொம்மைகள், கற்சிலைகள், உலோகச் சிலைகள், மரப் பாவைகள் முதலியவைகள் செய்து புதிய அருளுலக வாரிசுகளை கணக்கற்றுத் தோற்றுவித்தார்.

சித்தர் மருத்துவத்தையும், சித்த மருத்துவத்தையும் வளவளர்ச்சி பெறச் செய்தார். அருளாளிகள், அருளாடு நாயகங்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள் என்ற நால்வகையினரைத் தோற்றுவித்து; உருவ, அருவ, அருவுருவ நிலையிலிருந்த அருளுலகத்தாரோடு மக்களுக்கு நேரடியான தொடர்புகளை ஏற்படுத்தினார். குருகுலங்கள், தவப் பள்ளிகள், சத்திச் சாலைகள், சித்திச் சோலைகள், ... முதலிய பல கல்வி நிறுவனங்களை உருவாக்கிக் கருத்து விழிச்சியையும், அறிவுச் செழிச்சியையும் உண்டாக்கினார்.

இவரால் முடிந்தவரை ஓலைச் சுவடிகளில் பதினெண்சித்தர்களின் பூசாமொழிகளையும், பூசாவிதிகளையும், கருவறைப் படிகளையும், ஐந்திறச் சாத்திறங்களையும், ... எழுதி நாடெங்கும் இருந்த தக்கார்களுக்கு வழங்கி அருளுலக ஆசான்களையும், கலைஞர்களையும் உண்டாக்கினார். இவற்றால் எல்லாம் வடஆரிய மாயைகளை, பிறமணச் சூழ்ச்சிகளை, *ஹிந்துமதப்* பொய்களை, ஆபாசங்களை, அநாகரீகக் கற்பனைகளை, சுரண்டல் போக்குகளை, ஏமாற்றுக்களை, மூட நம்பிக்கைகளை, பயனற்ற பழக்க வழக்கங்களை, ... முறியடித்து; **மெய்யான இந்துமத**த்தை

மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிமீட்சியும் அடையச் செய்ய முடியவில்லை.

எனவே, அவர் இலக்கிய பாரம்பரியங்களிலிருந்தும், குரு பாரம்பரியங்களிலிருந்தும் புராண இதிகாசங்களைத் தேர்ந்தெடுத்து முதல் யுகமான கிரேதா யுகத்துக்கு 18 புராணங்கள், திரேதா யுகத்துக்கு 18 புராணங்கள், துவாபர யுகத்துக்கு 18 புராணங்கள் என மூன்று யுகத்திற்கு சமய வரலாற்றை சமுதாய வரலாறுகவும், அரசியல் வரலாறுகவும் தொகுத்துப் பரப்பினுர். இதன் அடிப்படையிலாவது **மெய்யான இந்துமத**த்துக்குப் புது வாழ்வும், புதுப் பொலிவும் கொடுக்க முற்பட்டார். ஆனுல், அவருடைய முயற்சிகள் சூழ்ச்சித் திறமிக்க வடஆரியர்களால் திசை திருப்பப் பட்டு விட்டன. அவர் எவ்வளவோ முயன்றும் தனிமனிதராகவே போரிட்டபடி தம் வாழ்வை முடித்துக் கொள்ள நேரிட்டு விட்டது.

ஆனுல், அவர் மீண்டும் தோற்றுவித்த இந்து மறுமலர்ச்சி இயக்கமும் அதனுடைய 12 கிளை அமைப்புக்களும் 200 ஆண்டுகளாக நன்கு கிளைத்துச் செழித்து வளர்ந்திருக்கின்றன. இவற்றின் இரண்டாவது தலைவராகப் பொறுப்பேற்ற சித்தர் காகபுசுண்டர் காக்கா வழியன் பண்ணையாடி காக்கையர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்கள் உலக மார்க்சீயச் சிந்தனையாளர்களுள் உயர்திரு இலெனின் அவர்களுக்கும், உயர்திரு மா சே துங்கிற்கும் அடுத்தபடியாகக் கருதப்படும் மாபெரும் மார்க்சீயச் சிந்தனையாளராக இருந்தார். அதனுல், அவர் அனைத்து வகையான சித்தர் நெறிப் போதனைகளையும், சாதனைகளையும் வரலாற்றுக் கால அடிப்படையில் முறைப்படுத்தி வகைப்படுத்தித் தொகுத்திட்டார். இவைகளை எல்லாம் அச்சிட வேண்டுமென்றுல் இலட்சக் கணக்கான ரூபாய்களுக்கு மேல் செலவாகும் என்பதால்; ஆயிரக் கணக்கில் ரூபாய் செலவு செய்து தாள்களில் எழுதி உலகின் பல பாகங்களுக்கும் அனுப்பிப் பாதுகாக்க ஏற்பாடு செய்தார்.

மேலும், தமிழர்களிலே தங்களுடைய மூதாதையர்களுடைய போதனைகளையும், சாதனைகளையும் தெரிய, பரப்ப, பாதுகாத்திட யாராவது சிலர் கிடைத்திட மாட்டார்களா? என்ற ஏக்கத்தில் 'சித்தர்களின் இலக்கியங்கள்', 'மெய்யான இந்துமத இலக்கியங்கள்', 'இம்மண்ணுலகின் முதல் மனிதர்களின் இலக்கியங்கள்', 'மானுட மொழிகளில் முதல் மொழியின் இலக்கியங்கள்' ... என்ற தலைப்புக்களில் கணக்கற்ற கட்டுரைகளையும், அஞ்சல்களையும் எழுதிக் குவித்தார்.

ஆனால், தமிழர்களைத் தவிர **மற்றவர்கள்தான்** தமிழிலக்கியங்களில் ஆர்வம் காட்டினார்கள், இதேபோல மெய்யான இந்துக்களைத் தவிர **மற்றவர்கள்தான்** மெய்யான இந்துமதத்தில் ஆர்வம் காட்டினார்கள். எனவே, தொடர்ந்து இ.ம.இ.யின் இரண்டாவது தலைவரும் தனிமனிதராகவே பெரும்போர்களைச் செய்து மறைந்தார். அவர் மிகவும் மனம் நொந்து வெந்து;

"... இந்தத் தமிழர்களை யாராலும் திருத்த முடியாது. இவர்கள் பலி கிடாய்கள் போல பிறமண்ணினரான வடஆரியரின் கால்களைக் கழுவிக் குடிக்கத்தான் காத்திருக்கிறார்கள். இவர்களுக்குத் தன்னம்பிக்கையோ, தன்மான உணர்வோ, சுயமரியாதை உரிமைப் பிடிப்போ, இனப் பற்றோ, இன ஒற்றுமையோ, மொழிப் பற்றோ ஏற்படாத வண்ணம் பிறமண்ணினரான பிராமணர்கள் **அரசியல் கட்சிகள் என்னும் மாயங்களையும், மதப் போர்கள் என்ற மாயங்களையும், சாதிவெறிச் சண்டைகள் என்ற திசை திருப்பல்களையும்** கையாண்டு விடுகிறார்கள். ..."

இப்படிப் பலவாறு நம் தமிழர்களைப் பற்றிக் கூறுகிறார். அவருடைய உயிருக்குப் பலமுறை விலை பேசப்பட்ட காரணத்தால் அவர் பொது வாழ்விலிருந்தே விலகி இலைமறை காயாகவே வாழ்ந்து சென்றிட்டார். ஆனால், தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்ற முக்கோணக் கோட்டை வலுப்படுவதற்கும், வளப்படுவதற்கும்

தேவையான இலக்கியங்களை நன்கு திட்டமிட்டு உருவாக்கிச் சென்று விட்டார். அவருடைய படைப்புக்களை யெல்லாம் கையெழுத்துப் பிறதிகளாகவும், அச்சிட்ட சிறுசிறு வெளியீடுகளாகவும் வழங்கிடுவதன் மூலம்தான் **தமிழினத்தின் உயிர்நாடியான மெய்யான இந்துமதம்** பாதுகாக்கப் பட்டு வருகிறது.

அதாவது, சமுதாய உணர்ச்சிக்கும், சமய உணர்ச்சிக்கும் வேறுபாடோ, முரண்பாடோ, மாறுபாடோ, பகையோ, போட்டி பொறுமையோ உருவாகிடாமல் இரண்டும் ஒன்றுக இணைந்து செயல்பட்டிட்டால்தான் **மெய்யான இந்துமத**த்தின் வழியாக தமிழினப் பற்று, மொழிப் பற்று, இன ஒற்றுமை, இன உரிமை, மொழி உரிமை, மொழி வளர்ச்சி, மொழி ஆட்சி, இன விழிச்சி, இனச் செழிச்சி, இனக் கிளர்ச்சி, இன விடுதலை, இன ஆட்சி, ... முதலியவைகள் அனைத்தும் முளைத்துக் கிளைத்துச் செழித்திடும்! செழித்திடும்! செழித்திடும்!

3) **இன்றைக்கு நாட்டு நடப்பில் திரேதா யுகத்து இராமாயணம் பற்றியும், துவாபர யுகத்து பாரதம் பற்றியும் அதிகமான சிந்தனைகள் வளர்ந்திருக்கின்றன. பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்கள் தங்களுடைய *பொய்யான ஹிந்துமதத்தின்* கண்களாக, கைகளாக, கால்களாக இந்த இரண்டு பெரும் காப்பியங்களைத்தான் பயன்படுத்துகிறுர்கள். எனவேதான், *பொய்யான ஹிந்துமதத்தின்* பிடியிலிருந்து தமிழர்களை விடுவிப்பதற்காக சித்தர் இராமாயணம், சித்தர் பாரதம் என்ற இரண்டும் வெளியிடப் படுகின்றன.**

இவை ஒவ்வொன்றுமே 18 புராணங்களின் கூட்டாக, ஒருங்கிணைப்பாக, சாரமாகத் தோன்றியவைதான். மேலும், இராமாயண நிகழ்ச்சிகள் அனைத்துமே **விசுவாமித்திரர் என்கின்ற தனிமனிதரின்** திட்டப்படியே நிகழுகின்றன. இதேபோல், பாரதகால நிகழ்ச்சிகள் அனைத்துமே **கண்ணன் என்கிற தனிமனிதனின்** திட்டப்படியே

நிகழுகின்றன. எனவேதான், இந்த இருவரையும் பற்றிய மெய்யான வாழ்வியல் வரலாற்றுக் குறிப்புக்களை வெளியிடும் பணி துவக்கப் பட்டிருக்கிறது. இதுவே, சித்தர் இராமாயணத்தையும், சித்தர் பாரதத்தையும் புதுப் பொலிவோடு உலா வரச் செய்திருக்கிறது.

4) திரேதா யுகத்தில் வாழ்ந்த 18 பெரிய மனிதர்களின் புராணங்களின் சாரம்தான் இராமாயணம். இதை யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. எனவே அந்த 18 பெரிய மனிதர்களின் பெயரில் உள்ள புராணங்களை இங்கே பட்டியலிட்டுக் காட்டுகிறோம்.

I) காசிப முனிவர்:- இவர்தான் உலகின் பயிரின உயிரினத் தோற்றங்களுக்குக் காரணமாக இருந்தவர். இவர் மணந்து கொண்ட பெண்களுக்குத் தோன்றிய வாரிசுகளே பல்வேறு வகை பயிரின உயிரினங்களாக இருக்கின்றன.

II) விபாண்டக முனிவர்:- இவர் காசிப முனிவரின் மகன் ஆவார்.

III) கலைக்கோட்டு முனிவர் எனப்படும் ரிசிய சிருங்கர்:- இவர் விபாண்டக முனிவரின் மகன் ஆவார். இவரே தம் காலத்தில் வாழ்ந்த பல முனிவர்களுடன் சேர்ந்து யாகம் செய்து அதன் பயனாக தசரத மன்னனுக்கு இராமன், இலக்குமணன், பரதன், சத்துருக்கனன் ஆகியோரைப் பிறக்கச் செய்தார். இராமனின் பிறப்புக்கு யாகம் செய்த இவருடன் துணையாக நின்ற முனிவர்கள்:

IV) சுயக்ஞ முனிவர், V) வாமதேவ முனிவர், VI) சாபாலி முனிவர் (காபாலி முனிவர் என்று பாட வேறுபாடு உள்ளது).

VII) வசிட்டர்:- இவரே சூரிய குல அரசகுருவாக இருந்து தசரதனின் அரசவையில் இருக்கிறார்.

VIII) விசுவாமித்திரர்:- இவர்தான் சூரிய குல அரசகுரு பதவிக்காக வசிட்டருடன் போட்டியிட்டுத் தோற்றவர். ஆனால்,

இவருக்கும் வசிட்டருக்கும் இடையே இருந்த போட்டி இறுதிவரை தொடர்ந்தது. இந்தப் போட்டியின் விளைவாக முதலில் அரிச்சந்திர புராணம் நிகழ்ந்தது. அதேபோல் <u>வசிட்டர், விசுவாமித்திரர் இருவரின் போட்டியின் காரணமாகவே இராமாயணம் நிகழ்ந்தது</u>.

IX) <u>யக்ஞவல்லி</u>:- இவர் திரேதா யுகத்தின் நாயகராக விளங்கியவர். யோகீசுவரர், மாந்தரீக வல்லி என்ற பட்டங்களை யெல்லாம் பெற்றவர். இவர்தான் இராமன் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அப்படியே தொகுத்து சித்தர் இராமாயணம் என எழுதினார்.

X) <u>அகத்தியர்</u>:- தவப் பெரியோராகிய இவரை இராமன் தனது வனவாசத்தின் போது தண்டகாரண்யத்தில் சந்தித்தான். இவர் இராமனுக்கு ஒரு சிவதனுசுவை அளித்து வாழ்த்தி அனுப்பினார்.

XI) <u>சமதக்கினி முனிவர்</u>:- இவர் பரசுராமனின் தந்தை.

XII) <u>பரசுராமன்</u>:- இவர் தமது தந்தையைக் கொன்ற அரச குலத்தார் மீது தீராக் கோபம் கொண்டு அரச குடும்பத்தார் அனைவரையும் அழிக்க முயன்று கொண்டிருந்தார்.

XIII) <u>பரத்துவாச முனிவர்</u>:- இராமன் தனது வனவாசத்தின் போது முதலில் சந்தித்த முனிவர்.

XIV) <u>சுதீட்சண முனிவர்</u>:- இராமனின் வனவாசத்தின் போது சந்தித்தவர். இராமனுக்குத் தமது தவப்பயனை நல்கியவர்.

XV) <u>கோதம முனிவர் எனும் கௌதமர்</u>:- இவர் அகலிகையின் கணவர். இராமன் விசுவாமித்திரருடன் வனத்தில் செல்லும் போது விசுவாமித்திரர் இராமனின் தெய்வீக ஆற்றலைக் கொண்டு கல்லாய்க் கிடந்த அகலிகையை எழுப்பினார்.

XVI) <u>சரபங்க முனிவர்</u>:- இராமனின் வனவாசத்தின் போது இராமனைச் சந்தித்தவுடன் தன் மனைவியுடன் தீயில் புகுந்து

சாம்பலாகிறுர். (இவர் பெயர் சரபுங்கவன முனிவர் என்ற பாடவேறுபாடுடன் காணப் படுகிறது.)

XVII) அத்திரி முனிவர்:- இராமன் தனது வனவாசத்தின் போது சந்தித்த முனிவர். தவத்தில் பெரிய அனுசூயாவின் கணவர்.

XVIII) வால்மீகி:- இவருடைய ஆசிரமத்தில்தான் சீதை தங்கியிருந்து இலவன், குசன் ஆகிய இருவரையும் பெற்றெடுத்தாள். இவரும், விசுவாமித்திரரும், யக்ஞவல்லியும்தான் இலவ குசர்களே வளர்க்கிறுர்கள். விசுவாமித்திரர் இலவ குசர்களுக்குத் தம் கையால் பட்டம் சூட்டுகிறுர். அது முதல் தாமே அவர்களுக்கு அரச குருவாக விளங்குகிறுர்.

யக்ஞவல்லி திரேதா யுகத்தின் 18 புராணங்களேயும், மற்ற நூல்களேயும் தம்முடைய மாணுக்கர்களாகிய 18 வால்மீகிகளேயும், 18 கம்பர்களேயும் கொண்டு எழுதுவிக்கிறுர். யக்ஞவல்லி காலத்தில் வாழ்ந்த ஆதிகவி எனப்படும் 18 வால்மீகிகள், 18 கம்பர்கள் எனப்படும் 36 பேர்கள்தான் யக்ஞவல்லியின் சிறப்பான மாணுக்கர்கள். இந்தப் பதினெட்டு பேர்களில் ஒருவரே அயோத்தி காட்டில் வாழ்ந்த ஆதிகவி வால்மீகி ஆவார். இவர் சீதை அரக்க குலத்தைச் சேர்ந்தவள் என்பது தெரிந்திருந்தும் அவளுக்கு எல்லாவிதமான வசதிகளேயும், சிறப்புக்களேயும் தந்து தம் ஆசிரமத்தில் தங்க வைத்திருந்தார்.

சூர்ப்பணகையும், திரிசடையும், வீடணனும் இலவ குசர்களே மாயப் போர்களில் பழக்குவதற்குத் தமது ஆசிரமத்தை பாடி வீடாக வழங்கினுர். அனுமனும், அங்கதனும் சீதையைச் சந்தித்து இராமன் மீது வெறுப்புற்ற போது; அவர்கள் இராமனே எதிர்த்துச் செயல்படாமல் விலகி ஒதுங்கியிருக்குமாறு அறிவுரை கூறியவர். அதாவது, இலவ குசர்களுக்கும் இராமனுக்கும் நடந்த போரில் பங்கு பெற வந்த அனுமன் ‘இராமன் சீதையைக் கொலே செய்ய

ஆணையிட்டான்' என்பதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திகைத்து ஏதும் செய்வதறியாது விழித்து இமயமலைக்குச் சென்று ஆழ்ந்த தவத்தில் ஈடுபட்டதற்கு இந்த வால்மீகியே காரணம்.

இதேபோல் இராமனின் ஓலை பெற்று சுக்கிரீவன் ஒரு மாபெரும் வானரப் படையை அங்கதன் தலைமையில் அனுப்பிட்ட போது; இந்த வால்மீகிதான் அவனைத் தடுத்து நிறுத்தி யார் பக்கமும் சேர்ந்து போரில் ஈடுபடாமல் அயோத்தி காடுகளிலேயே தங்கியிருக்குமாறு செய்தார். இதேபோல், கங்கைக்கரை வேடன் குகன் மாபெரும் படையோடு அயோத்தி நோக்கி வந்த போது; அவனைச் சந்தித்து இராமன் சீதையைக் கொலை செய்ய ஆணையிட்ட செய்தியைக் கூறி; அவன் இலவ குசர்களுக்கு எதிர்த்தோ, இராமனுக்கு ஆதரித்தோ போரிடாமல் கங்கைக் கரைக்கே திரும்பிச் செல்லுமாறு செய்தவர் இந்த வால்மீகிதான்.

இலவ குசர்கள் இடைவிடாது 4 வருடங்கள் அயோத்தி மாநகரில் திடீர் திடீரென்று தாக்கி; அந்த அரச குடும்பத்திலிருந்த பெரும்பாலானவர்களைக் கொன்று குவித்து; கடைசியில் இராம இலக்குவனர்களையும் கைதிகளாகப் பிடிக்க முயலும் போது அவர்கள் ஓடிச் சென்று சரயு நதியில் விழுந்து மாண்டு முடிவெய்தும் வரை பேராதரவாக இருந்தவர் இவர்தான். சிறந்த இராம பத்தரான இவர் இராமன் சீதையைக் கொலை செய்ய ஆணையிட்டான் என்ற ஒரே காரணத்திற்காகவே சீதையையும் அவள் மகன்களையும் இறுதி வரை ஆதரித்தார். <u>இவர் சீதையை சத்தி தேவியாகவே நினைத்து இறுதிவரை வழிபட்டார்</u>.

இவர் தமது குருதேவர் யக்ஞவல்லியின் ஆணைக்குட்பட்டு ஆரம்பம் முதல் இறுதி வரை நடுநிலையிலேயே இருந்தார். எந்த நடவடிக்கையிலும் ஈடுபட வில்லை. மேலும், தமது குருதேவரின் விருப்பப்படி இராமன் வரலாற்றை பல பகுதிகளாக காப்பியமாகப்

பாடினர். இவர் யக்ஞவல்லியின் திரேதா யுகக் குறிப்புக்கள் போல் இராமனின் வரலாற்றுக் குறிப்புக்களே பல பகுதிகளாக எழுதித் தொகுத்ததால்தான் இவர் காலத்து ஆதிகவி வால்மீகி எனப்படும் 17 பேர்களும் (இவரைச் சேர்த்து 18 பேர்கள்), கம்பர் எனப்படும் 18 பேர்களும் இராமன் வரலாற்றை 27 வண்ண இலக்கியங்களாக காப்பியச் சுவையோடு இயற்ற முடிந்தது. இந்த ஆதிகவி வால்மீகியின் ஆசிரமத்தில்தான் சீதை தங்கியிருந்தாள் என்பதால் வால்மீகி என்ற பெயருக்கு மிகப் பெரிய சிறப்பு ஏற்பட்டு விட்டது. அதாவது இராமன், சீதை என்ற பெயர்களைப் போல் வால்மீகியின் பெயரும் அழியாப் புகழைப் பெற்று விட்டது.

'இலவகுச முடிசூட்டு விழா', 'இலவகுச வெற்றி', 'இலவகுச காதை', 'இலவகுச பிறப்பு', 'இலவகுச ஆட்சி', 'சீதையின் சபதம்', 'இராவணேசுவரனின் பேரர்கள்', 'சூர்ப்பணகை வெற்றி', 'திரிசடைப் பாசம்', 'இலக்குவன் நேர்மை', 'சூரியகுல அழிவு', 'இராமன் தோல்வி', 'அயோத்தி மாநகர் சீரழிவு', 'வீடணன் பரிகாரம்', 'அனுமன் தவம்', 'வசிட்டர் தோல்வி', 'விசுவாமித்திரர் வெற்றி', 'சீதை கீதை', 'இராமன் கீதை', 'வசிட்டன் கீதை', 'விசுவாமித்திரன் கீதை', 'சனகன் கீதை', 'யக்ஞவல்லி கீதை', 'வால்மீகி கீதை', 'இலவகுசர் கீதை' ... எனப்படும் பெயருடைய எண்ணற்ற நூல்கள் இராமனின் முடி சூட்டு விழாவிற்குப் பிறகு இலவகுசனின் முடி சூட்டு விழா வரை நிகழ்ந்த முழுமையான வரலாற்று நிகழ்ச்சிகளே விவரிக்கின்றன.

எனவேதான், **சித்தர் இராமாயணமே முழுமையான இராமாயணம்**.

***//உண்மை நகல்//***
***//இதன் மூலநகல்: சித்தரடியான் சுந்தரராமனின் கையெழுத்தில் இருந்த கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//***

# சித்தர் இராமாயணம்

## யக்ஞவல்லி தரும் இராமாயணக் குறிப்புக்கள்

1) இந்தத் தலைப்பில்தான் கருவூரூர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை அவர்கள் எண்ணற்ற இராமாயணச் செய்திகளை துளசிதாசரின் இராமாயணத்தை விட; வால்மீகியின் இராமாயணத்தை விட, மிகப்பெரிய அளவில் வழங்கிச் சென்றுள்ளார். இவர் தோற்றுவித்த இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் இரண்டாவது தலைவராகப் பொறுப்பேற்ற உலகப் பெரிய மார்க்சீய வாதிகளுள் ஒருவரான சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளையவர்கள் இவரிடம் நிறைய கேள்விகள் கேட்டு ஓலைச் சுவடிகளிலிருந்த இவருடைய படைப்புக்களை தெளிவாகவும், விளக்கமாகவும் தாள்களில் எழுதித் தொகுத்துள்ளார். இவர் செர்மானிய நாட்டில் பிறந்த யூத விஞ்ஞானியான அணுகுண்டைக் கண்டுபிடித்த டாக்டர் ஐன்சுடீனும்; உலகக் கம்யூனிச இயக்கத்தையும் (The International Communist Party), உலகப் பகுத்தறிவுக் குடியரசுக் கட்சியையும் (The Radical Democratic Party and the Rationalistic Party) நிறுவிய திரு M.N.இராயும் சேர்ந்து உருவாக்கிய உலக மத ஆய்வுக் குழுவின் (TWRRS = The World Religious Research Society) என்ற அமைப்புக்குத் தொடர்ந்து உலகத் தலைவராக இருந்தார். ஏனென்றால் திரு M.N.இராய் அவர்கள் இவரை இணைத்துக் கொண்டுதான் அனைத்துச் செயல்களையும் செய்திட்டார்.

மேலும், உலகம் சுற்றிய திரு M.N.இராய் அவர்கள், இரசியப் புரட்சியிலும், சீனப் புரட்சியிலும் நேரடிப் பங்கு பெற்றவர். திரு M.N.இராய் அவர்கள், **“… நான் நேரடியாக திரு விளாதிமீர் இலியிச் லெனினுடனும், மா சே துங்குடனும் பழகியதால்**

**இந்த இரண்டு பேர்களுடைய மார்க்சீயப் பேரறிவும், செயல் சித்தாந்தமும் இணைந்த ஒரு மாபெரும் மனிதரே திரு எம்.பி.பிள்ளையவர்கள் ....”** என்று சித்தர் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை (திரு எம்.பி.பிள்ளை) அவர்களை மிகப் பெரிய மார்க்சீய வாதியாகச் சித்தரித்ததற்கு ஏற்ப திரு எம்.பி.பிள்ளையவர்கள், சித்தர் ஏளனம்பட்டியார் வழங்கிய அனைத்துச் செய்திகளையும் மார்க்சீயப் போக்கிலேயே நன்கு ஆராய்ந்து, அறிந்து, புரிந்து, தெளிந்து விளக்கியிருக்கிறார் என்பதால்தான் இந்த நான்கு யுகங்களைப் பற்றிய செய்திகளையும் நன்கு தெரிந்து கொள்ள முடிகிறது. எனவே, யக்ஞவல்லியின் இராமாயணச் செய்திகள் மிகமிகச் சுவையாகவும், புதுமை மிக்கவையாகவும் இருப்பதோடு ஆராய்ச்சிக்குரியவையாக இருக்கின்றன.

2) <u>இராவணன் மனைவி ‘வண்டமர் குழலி’</u>:

இரவு வண்ண மேனியனான இராவணனின் மனைவி தேவலோகத்துப் பெண்டிரெல்லாம் வெட்கி, நாணிப் பொறாமையுற்றுப் புழுங்கிடுமளவிற்கு கரிய, நெடிய, அடர்ந்த, மணமிகு கூந்தலைப் பெற்றிருந்தாள். வாசனை மிக்க மலர்களில் அமர்வதை விட வண்டுகள் அவளுடைய கூந்தலைச் சுற்றி வட்டமிடுவது அவளுடைய பெயர்ப் பொருத்தத்தை விளக்குகின்றது. தெய்வ மகளிர்களின் வடிவழகையும், அருட்பொலிவையும் மிஞ்சுகின்ற பேரழகு படைத்த இவள் மிகச் சிறந்த கற்புக்கரசியாதலால்; இவளைத் தென்னிலங்கை வேந்தன் வணங்கும் ஈசனின் நெற்றிக் கண்ணாகவே நினைத்து மூவுலகும் நடுங்கிற்று. இப்பேருண்மையினை இராவணன் வாயிலாகவே உணரும் நிகழ்ச்சிதான் மிகப் பெரிய இராமாயண உண்மைகளையெல்லாம் விளக்குகின்றது.

அம்பு பட்டு வீழ்ந்து கிடந்த இராவணனின் தலையருகில் முழங்காலிட்டு உத்தரியத்தை இடுப்பில் கட்டி, இடக்கை கட்டி, வலக்கையால் வாய்பொத்தி, குனிந்து, இராவணன் வாயால் அவன்

பாடிய 'இராவண கீதையின்' உயிர்த் தத்துவத்தைக் கேட்டுக் கொண்டிருந்த இராமனிடம் இராவணன்,

"இராமா! என் உயிர் பிரிகின்ற நேரம் வந்துவிட்டது என்பதை விட என் மனைவி வண்டமர் குழலி பூசையைப் பாதியிலேயே நிறுத்தி விட்டு என்னுடைய மரணச் செய்தி கேட்டு அரண்மனையிலிருந்து ஓடி வரும் அறிகுறியாக இலங்கை மாநகரின் காண்டாமணி ஒலிக்கின்றன. எனவே, அவள் வருவதற்கு முன்னால் நீ ஓடிவிடு. நான் வணங்கும் ஈசனாரின் நெற்றிக்கண் போன்றவள் அவள். யாராலும் வெல்லப்பட முடியாத என்னை முறையற்ற முறையில் நீ கொலை செய்து விட்டாய் என்பதனால் அவள் சாபமிடுவதற்கு முன் அவளின் கோபப் பார்வையினால் நீ சாம்பலாகி விடுவாய். உன்மீது அவளுக்கு உள்ள கோபம் அளவற்றது.

"நீயே நேரில் வந்து என் தங்கையை மானபங்கப் படுத்தியதற்கு மன்னிப்புக் கேட்டிருப்பாயானால் உன் மனைவியையும், உன் தம்பியையும், உன்னையும் சேர்த்து வான ஊர்தியில் ஏற்றி அயோத்தியிலேயே கொண்டு விட்டு விடும்படி எனக்கு அன்புக் கட்டளை யிட்டிருப்பாள் என் காதல் மனைவி வண்டமர் குழலி. நீ சூழ்ச்சியாக எந்த விதமான போர்முறையும் தெரியாத குரங்குகளைத் துணையாக அழைத்துக் கொண்டுவந்து முறையற்ற போர் நிகழ்த்தி விட்டாய். எனவே ஓடிவிடு, ஓடிவிடு, ஓடிவிடு."

என்று கூறியபடி உயிர் துறந்தான். அவனின் இறுதி மூச்சு நிற்பதற்குள் இராமன் ஓடி ஒளிந்து கொண்டான்.

3) இலக்குவன் இராவணனின் தங்கை சூர்ப்பணகையின் மூக்கை அறுத்து அவமானப் படுத்திய செய்தியைக் கேட்டதுமே இராவணனை விட அவன் மனைவியான வண்டமர் குழலிதான் மிகவும் கொதிப்படைந்து "பெண்ணை அவமானப் படுத்திய பேடிகளான அந்த அயோத்தி இளவரசர்களுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும். உடனடியாக யாரையாவது அனுப்பி அவர்களை மன்னிப்புக் கேட்டுத் திருந்தும்படிச் செய்யவேண்டும்....." என்று கூறினாள்.

ஆனால், இராவணன் "..... நாம் தூது அனுப்புகின்ற அளவுக்கு அவர்கள் பெரியவர்கள் இல்லை. உடனே யாரையாவது அனுப்பி அவர்களைப் பிடித்து வரச் சொல்கிறேன்" என்றான்.

அதற்கு வண்டமர் குழலி "32 வயது குமரி சீதை 16 வயது பாலகனான இராமனை எந்நேரமும் காமக் களியாட்டத்தில் மகிழ்வித்துக் கொண்டிருக்கிறாள். அவளை உடனே சிறையெடுத்துக் கொண்டு வந்துவிட்டால்தான் இராமனுக்குப் பெண்ணின் பெருமையும், அருமையும் புரியும்" என்று கூறினாள்.

அப்படி வண்டமர் குழலி கூறியதன் பேரில்தான் இராவணன் சீதையைச் சிறையெடுத்து வந்தான்.

4) கற்புக்கரசியான வண்டமர் குழலி சீதையிடம் பலமுறை அவளுடைய காமக் களியாட்டக் காதல் விளையாட்டுக்களுக்குப் பொம்மை போல் பயன்பட்ட இராமனுக்கு உடனே அவளே செய்தியனுப்பி நேரில் வந்து இராவணனிடம் மன்னிப்புக் கேட்டு அவளை அழைத்துச் செல்லுமாறு செய்தி கூறும்படிக் கூறினாள். ஆனால், சீதையோ இராமனுக்குச் செய்தியனுப்ப மறுத்து விட்டாள். ஏனென்றால், தான் வழங்கிய காமக் களியாட்ட இன்பங்களை எண்ணிப் பாலகனான இராமன் பித்துப் பிடித்து எப்படியும் இலங்கைக்கு வருவான், அதுதான் தனக்குச் சிறப்பு என்று பிடிவாதம் பிடித்தாள். அவளுடைய பிடிவாதத்தால் இராமனும், இலக்குவனும் இராவணனிடம் மாள நேரிடும் என்று எடுத்துக் கூறினாள் வண்டமர் குழலி.

ஆனால், சீதையோ, வண்டமர் குழலி மனம் புண்படும்படி "முரட்டு வீரனான இராவணனை பாலகனான இராமன் தந்திரத்தாலும், தக்க சூழ்ச்சிகளாலும் துணைவர்களாலும் வென்றிடுவான்" என்று கூறிப் பிடிவாதம் பிடித்தாள்.

5) இராவணனும், வண்டமர் குழலியும் எதிர்பார்த்தது போல் அயோத்தி இளவரசர்களான இராமனும், இலக்குவனும் தாங்கள்

இராவணனின் தங்கையான சூர்ப்பணகையின் மூக்கை அறுத்து அவமானப் படுத்தியதால்தான் சீதையை மாயமாக யாரோ வந்து தூக்கிச் சென்றிருக்கிருர்கள் என்று ஊகித்து உணர முடியாதவர்களாக இருந்து விட்டார்கள்.

அது மட்டுமல்ல, அவர்கள் சீதை காணுமல் போன செய்தியை அயோத்திக்கும், காடுகளில் வாழ்ந்த முனிவர்களுக்கும், இருடிகளுக்கும், பாண்டிய, சோழ, சேர மன்னர்களுக்கும் தெரிவித்து அவர்களின் துணேயோடு சீதையைத் தேட முயற்சிக்க வில்லே. குரங்கான அனுமனே அனுப்பித் திருட்டுத் தனமாக அசோக வனத்திலிருந்த சீதையோடு தொடர்பு கொண்டதுமல்லாமல், அந்தக் குரங்கு இலங்கையின் பல பகுதிகளே அழித்தும், இராவண குமாரனேக் கொன்றும் செய்த அடாத செயல்களுக்கு இராமனும், இலக்குவனும் இராவணனுக்குத் தூதனுப்பி மன்னிப்பு கேட்கவில்லே.

சீதை இருக்குமிடம் தெரிந்த பிறகும் கூட அயோத்தியின் இளவரசர்கள் முறைப்படி அரசர்களுக்குச் சொல்லியனுப்பி நால்வகைப் படையுடன் வந்து இராவணனேச் சந்திக்க வில்லே. அரசமுறைப்படி மனிதர்களேத் தூதாக அனுப்ப வில்லே. இலங்கையின் எல்லேக்குக் குரங்குப் படையுடன் சென்ற பிறகும் கூடத் தனது தம்பியான இலக்குவனே இராவணனிடம் தூது அனுப்ப வில்லே. மனிதனேத் தூதாக அனுப்பாமல் அங்கதன் என்கின்ற ஒரு குரங்கையே தூதாக அனுப்பி இராவணனே மீண்டும் அவமானப் படுத்திஞன்.

சூர்ப்பணகையின் மூக்கையறுத்த இலக்குவன் இலங்கேசுவரனுன இராவணனே நேரில் பார்க்க அஞ்சி நடுங்கிஞன். இராமனும் தாங்கள் சூர்ப்பணகையை அவமானப் படுத்தியதற்குச் சமாதானம் கூறி அல்லது மன்னிப்புக் கேட்டு இராவணனுக்குத் தூதனுப்பவேயில்லே. இராமன் விரும்பியதெல்லாம் இராவணனின் பெரிய சேனேயைத் தான் கொண்டு வந்திருக்கும் குரங்குக் கூட்டம் முறையற்ற முறையில் போரிட்டு அழிக்க வேண்டுமென்பதுதான்.

ஏனென்றால், காட்டிலிருந்த முனிவர்களும், இருடிகளும், 'இராவணனும், இராவணனின் சேனையும், அரக்கர் படையும் குரங்குகளால் அழியும்' என்ற சாபம் ஏற்கனவே இருக்கிறதென்பதைப் பற்றி இராமனிடம் கூறியிருந்தார்கள்.

எனவேதான், இராமன் சூரிய குலத்தின் மிகப் பெரிய வீரனாகத் தான் வளர வேண்டும் என்ற ஆசையில் தனது திரேதா யுகத்தில் மூவுலகையும் வென்று வாழும் இராவணேசுவரனை எப்படியாவது வென்று பெரும் புகழ் ஈட்டி விட வேண்டும் என்று பேராசைப்பட்டுப் போருக்குத் தயாரானான்.

கற்புக்கரசியான வண்டமர் குழலி இராமனின் பேராசையை ஊகித்து உணர்ந்து இராவணனிடம் "....16 வயது பாலகனாக இருக்கும் போதே 32 வயது குமரியான சீதையிடம் காமக் களியாட்டத்தில் அளவுக்கு மீறி ஈடுபட்டுப் பேடியாகி விட்ட இராமன், மூவுலகாளும் இலங்கேசுவரனை வென்று வாழப் பேராசைப் படுகிறான். எனவே, தாங்கள் அந்த இராமனை மதித்துப் போர்க் கோலம் பூண்டு போர்க்களம் செல்லத் தேவையில்லை. நமது செல்வன் இந்திரசித்தே (மேகநாதன்) போதும், அந்தக் குரங்குப் பட்டாளத்தையும், நெறிமுறை தவறிய அயோத்தி இளவரசர்களையும் வென்றிடுவதற்கு" என்று கூறினாள்.

அதாவது, இராமன் இராவணனோடு போர் செய்யக் கூடிய ஒரு வாய்ப்பு தனக்குக் கிடைத்தது என்று கூட மிக மகிழ்ந்திடக் கூடாது என்று எச்சரிக்கையோடு செயல்பட்டாள் வண்டமர் குழலி. ஆனால், சூழ்ச்சியிலும், நெறிமுறையற்ற செயல்களிலும், போர்ச் சதிகளிலும் வல்லமை பெற்ற பேடியான இராமன் மிகத் தந்திரமாக இராவணன் தம்பி வீடணனைத் தனக்குத் துணையாக்கிக் கொண்டு இராவணேசுவரனின் வலிமைகளனைத்தையும், ஆற்றல்களனைத்தையும், திறமைகளனைத்தையும், பண்புகளனைத்தையும், நீதி தவறாது நேர்மையான முறையிலேயே போரிடக் கூடிய பழக்கத்தையும்.... தெரிந்து கொண்டு;

அனைத்து விதமான சதிகளையும், சூழ்ச்சிகளையும், முறைகேடுகளையும், அநீதிகளையும், தவறுகளையும், பிழைகளையும், .... படிப்படியாக அடிப்படையோடு செய்து கும்பகர்ணனையும், மேகநாதனையும் கொன்று இறுதியில் இராவணேசுவரனையும் கொன்றான். இது ஒரு வகையில் திரேதா யுகத்தின் மன்னர் மன்னனாய், பெருவேந்தனாய், அரக்கர்கோனாய் விளங்கிய இராவணேசுவரனுக்குப் பெரும்புகழையே தேடிக் கொடுத்தது.

ஆனால், சூரிய குலத்துக்குக் கேவலம் வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் 18 வால்மீகிகளும், பல கம்பர்களும் இராவணன் பெருமைகளை மாசுபடுத்தி, இராமனின் தவறுகளை மறைத்து இராம கதை, இராம காதை, இராம காவியம், இராம கவிதை, இராம கீதை முதலியவைகளை இயற்றினார்கள்.

இருந்த போதிலும், இராமன் இராவணனைக் கொன்ற பிறகு மிகுந்த மனக் கலக்கத்திலும், சிந்தைக் குழப்பத்திலுமே இருந்திட்டான். அதனால்தான் சீதையோடு வாழ்ந்த வாழ்வையெல்லாம் மறந்து அவளைக் காட்டுக்கு அனுப்பவும் துணிந்திட்டான். அதன்பிறகும், தன்னுடைய மக்களான இலவ குசர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாதவனாகவே இருந்திட்டான். அரசனுக்குரிய இலக்கண முறைப்படி ஒற்றர்கள் மூலம் காட்டில் விடப் பட்ட சீதையைப் பற்றிய செய்திகளை சேகரிக்காமல் இருந்து விட்டான்.

இராவணனைக் கொன்று பெரும் புகழ் ஈட்டியிருந்த தனது அசுவமேத யாகக் குதிரையை இரண்டு சிறுவர்கள் பிடித்து நிறுத்தினார்கள் என்று கேள்விப்பட்ட உடனேயே ஒற்றர்களையோ, தூதுவர்களையோ, மந்திரிகளையோ, தனது தொண்டனான அனுமனையோ அனுப்பி அந்தச் சிறுவர்கள் யார்? என்று அரச ரீதியில் அறிய முற்படவில்லை. இதேபோல முரட்டுப் பிடிவாதமாகத் தனது மகன்களாகிய இலவ குசர்களிடம் எதிர்த்துப் போரிட்டுத் தோற்றுப் பேடியாக சரயு ஆற்றில் மூழ்கி இறந்தான்.

சூரிய குலத்தில் இப்படியொரு மன்னன் தோன்றினான் என்ற வரலாற்றை மூடி மறைக்கா விட்டால் சித்தர் காகபுசுண்டரின் பேருக்கே இழிவு வரும் என்பதால்தான் இராமனின் வரலாற்றை சூரிய குலத்துக்குப் பெருமை தரும் வண்ணம் கதையாகவும், காதையாகவும், கவிதையாகவும், கீதையாகவும் இருபத்தேழு வண்ணங்களில் எழுதுமாறு பதினெட்டு வால்மீகிகளுக்கும், பல கம்பர்களுக்கும் ஆணை பிறப்பித்தோம் யாம் (யக்ஞவல்லி).

இருந்த போதிலும் உண்மையை மறைத்த பழியும், குற்றமும் எமக்கு வந்து சேர்ந்துவிடக் கூடாது என்பதாலேயே யாம் எமது யுகத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையெல்லாம் உள்ளது உள்ளபடியே குறித்து வைக்கும் வழக்கப்படி இராமன், இலக்குவன், சீதை, இராவணன், வண்டமர் குழலி, கும்பகர்ணன், மேகநாதன் (இந்திர சித்து), வீடணன், விசுவாமித்திரர், வசிட்டர், சனகர், எண்கோண மேனியான் ... முதலியவர்கள் பற்றி உண்மை நிகழ்ச்சிகளையும், எமது உணர்வோட்டங்களையும் அவ்வப்போது குறித்து வைத்துள்ளோம். இக்குறிப்புகள் சித்தர்களுக்கு மட்டுமாவது தெரிந்திருக்க வேண்டும் என்பதாலேயே இக்குறிப்புக்களுக்குச் **சித்தர் இராமாயணம்** என்று பெயரிட்டோம்.

**- யக்ஞவல்லி.**

***//உண்மை நகல்//***

***//இதன் மூலநகல்: வேம்படிதாளம் சித்தரடியான் ஒருவரின் கையெழுத்தில் இருந்த கையெழுத்துப் பிரதியாக இருந்தது.//***

***[சித்தர் இராமாயணக் கட்டுரைகள் தொடரும்.....]***

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனுதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சீவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குரு பாரம்பரியம்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். <u>இவர் இலைமறை காயாகவே சித்தர் இராமாயணத்தை வளர்க்கவும், வாழ்வு பெறவும் செய்திட்டார். ஆனால், பிறமண்ணினரான பிருமணர்கள் என்னும் வடஆரியர்கள் மிகுந்த முன்னெச்சரிக்கையோடு சித்தர் இராமாயணம் செல்வாக்குப் பெற முடியாமல் செய்து விட்டார்கள்.</u>

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org**
**Email: indhuism@gmail.com**